## தாய்த் தமிழ்நாட்டை பெருமை அடைய வைப்பது கல்விதான்! மாணவச் செல்வங்களே – நன்றாகப் படித்து

# சாதிக்க முடியாததையெல்லாம் சாதித்து சாதனையாக்குங்கள்!

## கொளத்தூர், அருள்மிகு கபாலீசுவரர் கலை – அறிவியல் கல்லூரியின் மூன்றாம் ஆண்டு தொடக்க விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, ஆக. 2 -**

**கொளத்தூரில் கபாலீசுவரர் கலை - அறிவியல் கல்லூரியின் மூன்றாம் ஆண்டு தொடக்க விழாவில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றுகையில், "தாய்த் தமிழ் நாட்டை பெருமை அடைய வைப்பது கல்வி தான் என்றும் மாணவச் செல்வங்களே - நன்றாகப் படித்து சாதிக்க முடியாததை யெல்லாம் சாதித்து சாதனையாக்குங் கள்" என்று குறிப்பிட்டார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (31.7.2023) சென்னை, கொளத்தூர், அருள்மிகு கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் மூன்றாம் ஆண்டு தொடக்க விழாவில் கலந்து கொண்டு ஆற்றிய உரை வருமாறு :-

எவ்வளவு பணி இருந்தாலும், கொளத்தூர் தொகுதிக்கு வந்து, உங்கள் முகத்தையெல்லாம் பார்த்தால்தான், எனக்குப் புது எனர்ஜியே ஏற்படுகிறது. தமிழ்நாட்டிற்கே நான் முதலமைச்சர். ஆனால், உங்களுக்கு நான் சட்டமன்ற உறுப்பினர். உங்களுடைய அன்பால் தான், உங்களுடைய பேரன்பால்தான், உங்களுடைய வாழ்த்துகளோடுதான் நான் ஹாட்ரிக் வெற்றி பெற்றேன். மூன்றுமுறை தொடர்ந்து எம்.எல்.ஏவாக என்னை இந்த தொகுதியில் நீங்கள் தேர்ந்தெடுத்தீர்கள். நீங்கள் எல்லாம் என்னை எம்.எல்.ஏவாக தேர்ந்தெடுத்த காரணத்தால்தான் இன்றைக்கு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக இருக்கிறேன். அதனால், நீங்கள் உரிமையோடு கேட்பதை நிறைவேற்றுகின்ற பொறுப்பு எனக்கு உண்டு. கூடுதல் பொறுப்பு உண்டு.

### தொடங்கிய இரண்டாண்டில் கல்லூரியின் மிகப் பெரிய வெற்றி!

இந்த அருள்மிகு கபாலீஸ்வரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை, கடந்த 2.11.2021 அன்று நான் தொடங்கி வைத்தேன். இது தொடங்கிய இரண்டே ஆண்டுகளில், 685 மாணவ -மாணவிகள் இந்தக் கல்லூரியில் சேர்ந்து படிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். இதுவே, இந்தக் கல்லூரி எவ்வளவு நன்றாக செயல்படுகிறது என்று புரிந்து கொள்ளலாம். நன்றாக சொல்லி தருவதால்தான், பெற்றோர்களும் தேடி வந்து, உங்களை இங்கே சேர்த்திருக்கிறார்கள். முதல் வருடம் 240 பேர் சேர்ந்தார்கள். அடுத்த வருடம் மாணவர்களுடைய எண்ணிக்கை 480 ஆனது. இப்போது 685. ஆனால், அட்மிஷன் கேட்டு வருகின்ற விண்ணப்பங்கள் ஆயிரக் கணக்கில் இருக்கிறது. இதுதான் இந்தக் கல்லூரியுடைய வெற்றி. மிகப் பெரிய வெற்றி. இந்த வெற்றியில் பெரும்பங்கு யாருக்கு என்று கேட்டீர்கள் என்றால், நம்முடைய அமைச்சர் சேகர்பாபு அவர்களுக்கு தான்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (31.7.2023) கொளத்தூரில் உள்ள அருள்மிகு கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் மூன்றாம் ஆண்டு தொடக்க விழாவையொட்டி, அக்கல்லூரியில் பயிலும் 685 மாணவ, மாணவியர்களுக்கு கல்வி கட்டணம் ரூ.10,000/ மற்றும் கல்வி உபகரணங்களுடன் கூடிய புத்தகப் பைகளை வழங்கி, விழா பேருரையாற்றினார். இந்த நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் மரு. ஜெ.ராதாகிருஷ்ணன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்துசமய அறநிலையத் துறை சிறப்புப் பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர். க.வீ.முரளீதரன், அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் பி.விஜயகுமார் ரெட்டி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஏனென்றால், கடந்த 2021ஆம் ஆண்டு, இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் 10 கல்லூரிகள் திறக்கப்படும் என்று அறிவித்து, அதில் ஒன்றாக இந்தக் கல்லூரி அமைவதற்கு காரணமாக இருந்தவர் நம்முடைய சேகர்பாபு அவர்கள். இப்படி ஒவ்வொரு காரியத்தையும், பார்த்து பார்த்து செய்கின்ற காரணத்தால்தான் அதுவும் பார்த்து, பார்த்து வெற்றியடையக்கூடிய அளவுக்கு செய்கின்ற காரணத்தினால் தான், அவரை நான் எப்போதும் சேகர் பாபு என்று சொல்லாமல் செயல்பாபு என்று சொல்வதுண்டு.

### கல்வியே கடவுள் என்று தன் பணியை சிறப்பாகச் செய்யும் சேகர்பாபு!

அவர் மிகுந்த கடவுள் நம்பிக்கை கொண்டவர். ஃபோன் எடுத்து ரிங் டோன் கேட்டாலே தெரியும். ஐயப்பன் பாட்டுதான் வரும். அதனால், கல்விக் கான கடவுளையும் வணங்குகிறவர். கல்வியே கடவுள் என்று தன்னோட பணியை சிறப்பாக செய்து கொண்டு இருக்கிறார்.

அறநிலையத்துறை மூலம், இன்னும் பல அறம் நிறைந்த செயல்களை அவர் செய்யவேண்டும் என்று நான் வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன். அவருக்கும், இந்தக் கல்லூரி நிர்வாகத்திற்கும், உதவிப் பேராசிரியர்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய வாழ்த்துகளை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஏற்கனவே கடந்த இரண்டு ஆண்டுகளாக, இந்தக் கல்லூரியில் சேர்ந்த மாணவ மாணவிகளுக்கு கல்விக் கட்டணமும் கல்வி உபகரணங்களோடு கூடிய புத்தகப்பையும் நான் வழங்கினேன்.

இன்றைக்கு புதிதாக சேர்ந்திருக்கின்ற பேட்ச் வந்திருக்கிறீர்கள். அந்த மாணவர்களுக்கும் வழங்குகிறேன். இப்படி வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம், மாணவர்களான உங்களை சந்திப்பதும் – உங்களிடம் பேசுவதும், அதுதான் என்னை எப்போதும் ஆக்டிவ்வாக வைத்துக் கொள்கிறது. அதுதான் உண்மை. நான் சொன்னேன். வயது 70. ஆனால், 20 வயது போல இப்போது நிற்கிறேன். அதற்கு காரணம் நீங்கள் தான். நீங்களும் படிப்பில் ஆக்டிவ்வாக இருக்கிறீர்கள், இருக்கவேண்டும். இது தான் என்னுடைய வேண்டுகோள்.

### கல்விதான் தலைமுறை முன்னேற்றத்திற்கு அச்சாரமாக அமைந்திருக்கிறது!

இந்த படிப்பு நமக்கு சுலபமாக கிடைத்துவிடவில்லை. எத்தனையோ போராட்டத்திற்குப் பிறகு நமக்கு இந்தப் படிப்பு கிடைத்தி ருக்கிறது. இந்தக் கல்வி தான் நாம் மட்டுமில்லை, நம்முடைய தலைமுறையே முன்னேறுவதற்கான இது அச்சாரமாக அமைந்திருக்கிறது. அதனால்தான், நீங்கள் நன்றாக படிக்க வேண்டுமென்று நம்முடைய திராவிட மாடல் அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அதிலும், குறிப்பாக, பெண்கள் கல்வி கற்க எந்தத் தடையும் இருக்கக் கூடாது என்பதில் கவனமாக இருக்கிறோம்.

பசியில் வாடாமல் இருப்பதற்குதான், காலையில் பள்ளிக்கு வந்தவுடன், காலை உணவுத் திட்டம். மாணவிகள், பள்ளிகளுக்கு கல்லூரிகளுக்கு வேலைகளுக்குச் செல்ல, நகரப் பேருந்துகளில் இலவசப் பயணம். உங்களில் பல பேர் இந்தப் பயணத்தால், மாதம் கொஞ்சம் பணத்தை மிச்சப்படுத்தி, அதை கல்விச் செலவுகளுக்குப் பயன்படுத்தி இருப்பீர்கள் என்று நான் மனதார நம்புகிறேன்.

### மாணவ - மாணவியர் முன்னேற நான் முதல்வன் - புதுமைப் பெண் திட்டம்!

படிக்கும்போது பாடத்திட்டத்தை தாண்டி, உங்கள் திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டுமென்பதற்காகதான் 'நான் முதல்வன்' என்கிற ஒரு அற்புதமான திட்டம். அரசுப் பள்ளியில் படித்துவிட்டு கல்லூரிகளில் சேருகின்ற மாணவிகளுக்கு, 'புதுமைப்பெண்' என்ற திட்டத்தின் மூலம், மாதந்தோறும் 1000 ரூபாய் வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

இன்றைக்கு இரண்டு நாட்களாக நீங்கள் பத்திரிகைகளிலும் பார்த்திருப்பீர்கள், தொலைக்காட்சியிலும் பார்த்திருப்பீர்கள். படிப்பதற்காகவும், வேலை பார்ப்பதற்காகவும், வெளியூர் செல்ல வேண்டும் என்றால், பெண்கள் பாதுகாப்பாக தங்கிக் கொள்ள வசதியாக இப்போது 'தோழி விடுதிகள்' என்று விடுதி ஆரம்பித்திருக்கிறோம். குடும்பத் தலைவிகளாக இருக்கின்ற உங்கள் அம்மா மற்றும் சகோதரிகளுக்கு வருகிற செப்டம்பர் மாதம் பேரறிஞர் அண்ணா பிறந்தநாளிலிருந்து மாதந்தோறும் 1000 ரூபாய் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை அதையும் வழங்கப் போகிறோம்.

### மாணவர்கள் உயர்ந்த இடத்திற்கு வருவதே எனக்கு பெரும் மகிழ்ச்சி!

இப்படி ஒவ்வொரு கட்டமாக பார்த்துப் பார்த்து திட்டங்கள் தீட்டி உதவி செய்து கொண்டிருக்கிறோம். இதையெல்லாம் பயன்படுத்திக்கொண்டு நீங்கள் எல்லோரும் நன்றாக படிக்க வேண்டும். இன்னும் சில ஆண்டுகள் கடந்து, எங்கேயாவது ஒரு இடத்தில், ஏதாவது ஒரு சூழ்நிலையில், ஏதாவது ஒரு தருணத்தில் என்னை நீங்கள் சந்திக்கும் போது, "உயரமான பதவிகளில் இருக்கிறோம். இவ்வளவு பெரிய ஆளாகி விட்டோம்" என்று பெருமையோடு சொல்லும் அளவுக்கு அந்தச் சூழ்நிலை ஏற்பட்டால் அதைவிட மகிழ்ச்சி வேறு எதுவும் எனக்கு இருக்க முடியாது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இதைத்தான் தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கண்ட கனவுகள். அவர்கள் கண்ட கனவு இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் நிறைவேற்றுகிறான் என்பதில் எனக்கு பெருமை. இதைவிட பெருமை எனக்கு வந்து சேர முடியாது.

நீங்கள் பெருமை அடைவது ஒரு பக்கம் இருந்தாலும், எனக்கு அதைவிட முக்கியம் எது என்று கேட்டால், நீங்கள் படித்து உங்கள் பெற்றோரை பெருமை அடைய வைக்கவேண்டும்! இந்த தாய்த் தமிழ்நாட்டை பெருமை அடைய வைப்பதற்கு கல்விதான்! கல்வியை யாராலும் திருடவே முடியாது. அதுதான் நிலையான சொத்து. நீங்கள் எல்லோரும் நன்றாக படியுங்கள் என்ற வேண்டுகோளை மட்டும் இந்த நேரத்தில் வைத்து, சாதிக்க முடியாத சாதனைகளை எல்லாம் நீங்கள் சாதித்துக் காட்ட வேண்டும் என்ற அந்த வேண்டுகோளையும் வைத்து, இப்படிப்பட்ட ஒரு சிறப்பான நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உங்களை எல்லாம் சந்திப்பதில் நான் தொடக்கத்தில் சொன்னதுபோல, ஒரு எனர்ஜி மட்டுமல்ல, இன்னும் பல பணிகளை ஆற்றவேண்டும் என்ற அந்த உந்துதலையும் இந்த நிகழ்ச்சி எனக்கு வழங்கிக்கொண்டு இருக்கிறது. இப்படிபட்ட நிகழ்ச்சியில் உங்களை எல்லாம் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த நிகழ்ச்சியை மிகுந்த எழுச்சியோடு, ஒரு பாச உணர்வோடு, ஏற்பாடு செய்திருக்கின்ற இந்துசமய அறநிலையத் துறைக்கும், குறிப்பாக நம்முடைய அமைச்சர் சேகர்பாபு அவர்களுக்கு எனது இதயபூர்வமான நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொண்டு, உங்கள் அனைவருக்கும் மீண்டும் ஒரு முறை நன்றி கூறிக்கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

**ஒவ்வொரு கட்டமாக பார்த்துப் பார்த்து திட்டங்கள் தீட்டி உதவி செய்து கொண்டிருக்கிறோம். இதையெல்லாம் பயன்படுத்திக்கொண்டு நீங்கள் எல்லோரும் நன்றாக படிக்க வேண்டும். இன்னும் சில ஆண்டுகள் கடந்து, எங்கேயாவது ஒரு இடத்தில், ஏதாவது ஒரு சூழ்நிலையில், ஏதாவது ஒரு தருணத்தில் என்னை நீங்கள் சந்திக்கும்போது, "உயரமான பதவிகளில் இருக்கிறோம். இவ்வளவு பெரிய ஆளாகிவிட்டோம்" என்று பெருமையோடு சொல்லும் அளவுக்கு அந்தச் சூழ்நிலை ஏற்பட்டால் அதைவிட மகிழ்ச்சி வேறு எதுவும் எனக்கு இருக்க முடியாது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.**

---

## மணிப்பூரில் பெண்கள் பலாத்காரம், வன்முறை!

# பெண் நீதிபதிகள் அடங்கிய விசாரணைக் குழு அமைப்போம்!

## உச்சநீதிமன்றம் அதிரடி! காவல்துறைக்கு கடும் கண்டனம்!

**புதுடெல்லி, ஆக. 2 -**

**மணிப்பூர் வன்முறையில் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை சம்பவங்கள் குறித்து விசாரிக்க ஓய்வு பெற்ற பெண் நீதிபதிகள் கொண்ட குழுவை அமைக்க பரிசீலிப்பதாக உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது. கலவரத்துக்கு உடந்தையாக இருந்த மணிப்பூர் மாநில போலீசாருக்கு கடும் கண்டனத்தை நீதிபதிகள் பதிவு செய்துள்ளனர்.**

மணிப்பூரில் இரு பிரிவினர் இடையே ஏற்பட்ட மோதல் இனக் கலவரமாக மாறி, கடந்த 3 மாதமாக வன்முறை நீடிக்கிறது. இதில் 160 பேர் கொல்லப்பட்டுள்ளனர். வன்முறையில் சிறுபான்மை மக்களான பழங்குடியின குக்கி பெண்களுக்கு எதிராக பல்வேறு கொடூரங்கள் நடந்துள்ளன. கடந்த மே 4ம் தேதி அன்று 2 பழங்குடியின பெண்களை நிர்வாணமாக்கி நூற்றுக்கும் மேற்பட்ட ஆண்கள் ஊர்வலமாக இழுத்துச் சென்ற வீடியோ சமூக வலை தளங்களில் வெளியாகி நாட்டையே உலுக்கியது.

இந்த விவகாரம் தொடர்பாக உச்சநீதிமன்றம் தாமாக முன்வந்து வழக்கு பதிந்து விசாரிக்கிறது. இந்த விவகாரம் தொடர்பாக சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளதாக ஒன்றிய அரசு பிரமாண பத்திரம் தாக்கல் செய்துள்ளது. இந்த நிலையில், பாதிக்கப்பட்ட 2 பெண்கள் தரப்பில் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில், "சிறப்பு புலனாய்வுக் குழு (எஸ்.ஐ.டி.) விசாரணைக்கு உத்தரவிடப்பட வேண்டும். எங்களுக்கு உரிய பாதுகாப்பு தரப்பட வேண்டும். எங்களின் அடையாளங்கள் வெளிப்படுத்தப்படாமல் பாதுகாக்க வேண்டும். அருகில் உள்ள மாஜிஸ்திரேட் மூலமாக குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 164ன் கீழ் எங்கள் வாக்குமூலத்தை பதிவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்" என கோரி இருந்தனர்.

இந்த மனு தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட், நீதிபதிகள் பர்திவாலா, மனோஜ் மிஸ்ரா ஆகியோர் கொண்ட அமர்வில் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. பாதிக்கப்பட்ட 2 பெண்கள் சார்பாக ஆஜரான மூத்த வழக்கறிஞர் கபில் சிபல், "குற்றம் செய்தவர்களுடன் மாநில போலீசார் கைகோர்த்துள்ளனர். போலீசார்தான் 2 பெண்களையும் கும்பலிடம் அழைத்துச் சென்றுள்ளனர். அந்தக் கும்பலிடம் போலீசார் தான் 2 பெண்களை ஒப்படைத்துள்ளனர். அதன்பிறகுதான் எல்லாம் நடந்துள்ளது. அப்படியிருக்கையில், சி.பி.ஐ. விசாரணை மீது பாதிக்கப்பட்ட



பெண்களுக்கு எப்படி நம்பிக்கை வரும். அந்தப் பெண்கள் நம்பிக்கை வைக்கும் விசாரணை அமைப்பு தான் இப்போது நமக்கு தேவை. அதனால் தான் சிறப்பு புலனாய்வுக் குழு அமைக்கப்பட வேண்டும். இதுவரையிலும் மணிப்பூர் வன்முறை தொடர்பாக எத்தனை வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பது பற்றி ஒன்றிய, மாநில அரசுகளுக்கே தெரியாது என்பதுதான் வேதனை" என்றார்.

மூத்த வழக்கறிஞர் இந்திரா ஜெய்சிங், "பலாத்காரத்தால் பாதிக்கப்பட்ட பலரும் அதிர்ச்சியில் உள்ளனர். முதலில் அவர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். எனவே சிறப்பு விசாரணைக் குழுவை அமைக்க வேண்டும்" என்று வாதிட்டார். பெண்கள் அமைப்பு சார்பில் ஆஜரான வழக்கறிஞர் விருந்தா குரோவர் வாதாடுகையில், "மணிப்பூரில் சிறுபான்மையினராக உள்ள குக்கி பழங்குடியின பெண்களுக்கு எதிராக பல பாலியல் வன்கொடுமை வழக்குகள் உள்ளன. கார் கழுவும் மையத்தில் பணிபுரிந்த 2 பெண்கள் ஒரு கும்பலால் கூட்டு பலாத்காரம் செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளனர். அவர்களின் குடும்பத்தினர் நிவாரண முகாம்களில் உள்ளனர். கொல்லப்பட்ட பெண்களின் உடல்கள் எங்கே என்றே தெரியவில்லை. இது குறித்து வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதே தவிர எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை" என்றார்.

இதைக் கேட்ட தலைமை நீதிபதி சந்திரசூட் பிறப்பித்த உத்தரவில் கூறியிருப்பதாவது: இரண்டு பெண்களுக்கு எதிராக கொடூரமான சம்பவங்கள் நடந்துள்ளது. அதைப் பற்றி அருகில் இருந்த போலீசாருக்கு தெரியவில்லை என்றால் அதை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும். இந்த விவகாரத்தில் வழக்குப் பதிவு செய்ய 14 நாட்கள் போலீசார் எடுத்துக் கொண்டது ஏன்? எதற்காக காலதாமதமாக வழக்குப் பதிவு செய்யப்பட்டது? வன்முறை தொடர்பாக இது வரை 6,000 வழக்குகள் பதிவு செய்யப்பட்டதாக கூறப்பட்டுள்ளது. அதில் எத்தனை எப்.ஐ.ஆர். உள்ளது, பூஜ்ய எப்.ஐ.ஆர். எத்தனை, எத்தனை கைதுகள், எத்தனை பேர் நீதிமன்ற காவலில் உள்ளனர், 164 சட்டப்பிரிவின் கீழ் எத்தனை பேரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது, எத்தனை பேருக்கு சட்ட உதவி வழங்கப்பட்டுள்ளது என்ற விவரங்களை மாநில அரசு தாக்கல் செய்ய வேண்டும்.

இந்த விஷயத்தில் சிறப்பு புலனாய்வுக் குழுவை அமைப்பது தொடர்பாக ஒன்றிய, மாநில அரசுகள் தங்கள் கருத்தை தெரியப்படுத்த வேண்டும். சிறப்பு புலனாய்வுக் குழு அமைப்பது தொடர்பாக ஆய்வு செய்ய ஓய்வு பெற்ற 2 பெண் நீதிபதிகள் கொண்ட குழுவை அமைக்க நாங்கள் பரிசீலிக்கிறோம்.

இவ்வாறு தலைமை நீதிபதி உத்தரவிட்டார்.

ஒன்றிய அரசு தரப்பில் ஆஜரான அட்டர்னி ஜெனரல் ஆர்.வெங்கடரமணி மற்றும் சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா ஆகியோர் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் தொடர்பான விவரங்களை தாக்கல் செய்ய கூடுதல் அவகாசம் கோரினர். அதனை தலைமை நீதிபதி நிராகரித்தார்.

### மணிப்பூர் கொடூரத்தை எதனுடனும் ஒப்பிட முடியாது!

விசாரணையின் போது, மேற்கு வங்கத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறை வழக்குகளையும் இந்த வழக்கோடு சேர்ந்து விசாரிக்க வேண்டும் என வழக்கறிஞர் பன்சூரி ஸ்வராஜ் கோரிக்கை விடுத்தார்.

அவர் வாதாடுகையில், "மேற்கு வங்கத்திலும் இதுபோன்ற கொடூரமான வழக்குகள் உள்ளன. சட்டீஸ்கர், ராஜஸ்தான் மாநிலத்திலும் பெண்களுக்கு எதிரான கொடூரம் நடந்துள்ளது. எனவே நாடு முழுவதும் இந்திய மகள்கள் பாதுகாக்கப்பட வேண்டும்" என்றார்.

இதைக் கேட்ட தலைமை நீதிபதி, "மணிப்பூர் விவகாரம், நிர்பயா வழக்கை போல தனி ஒரு கும்பலால் நிகழ்த்தப்பட்ட வன்முறை அல்ல. இது ஒரு கட்டமைக்கப்பட்ட சமூக ரீதியான வன்முறை. மணிப்பூரில் பெண்களுக்கு எதிரான கொடூரங்கள் இனவெறிக் கோணத்தின் அடிப்படையில் வேறுபட்ட நிலையில் இருக்கிறது. மேற்கு வங்கத்தை போல மணிப்பூரிலும் நடக்கிறது என கூற முடியாது. எனவே இதனை வேறெந்த மாநிலத்துடனும் ஒப்பிட்டு நியாயப்படுத்த முடியாது. இந்தியா முழுவதும் உள்ள பெண்களை பாதுகாக்க வேண்டும். இல்லையென்றால் எந்த பெண்ணுக்கும் பாதுகாப்பு தரக்கூடாது என்று சொல்கிறீர்களா? என்று வழக்கறிஞர் பன்சூரி ஸ்வராஜிடம் காட்டமாக கேட்டனர்.